# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1711/7 - 2011 ජුනි 20 වැනි සඳුදා - 2011.06.20

*1711/7 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*சீ.எவ். 1/64.*

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

*(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.*

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

கொழும்பு,
2011, யூன் 20.

**ஒழுங்குவிதி**

1. இவ்வொழுங்குவிதி 2011 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, அவசரகால (உள்ளூரதிகார சபைகளை நிர்வகித்தல்) ஒழுங்குவிதி என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இரண்டாயிரத்துப் பதினோராம் ஆண்டு பெப்புருவரி 28 ஆந் திகதிய 1695/4 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அவசரகால (உள்ளூரதிகார சபைகளை நிர்வகித்தல்) ஒழுங்குவிதியில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இவ்வொழுங்குவிதிக்கான அட்டவணையின் II ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்ட திகதிகளிலிருந்து முறையே (255 ஆம் அத்தியாயமான), நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் கீழும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் கீழும் இந்த ஒழுங்குவிதிக்கான அட்டவணையின் I ஆம் நிரலிற் குறித்துரைக்கப்பட்ட நகர சபைக்கும் பிரதேச சபைக்குமான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலொன்று எத்தேதியன்று நடாத்தப்படுகின்றதோ அத்திகதிவரை, மேற்கூறப்பட்ட சபைகளின் அலுவலர்களினது நிருவாகம், அத்தகைய அட்டவணையின் IV ஆம் நிரலில் எந்த அலுவலர்களின் பெயர்கள் குறித்துரைக்கப்படுகின்றனவோ அந்த அலுவலர்களின் இடத்தில், இந்த ஒழுங்குவிதிக்கான அட்டவணையின் III ஆம் நிரலில் எந்த ஆட்களின் பெயர்கள் குறித்துரைக்கப்படுகின்றனவோ அந்த ஆட்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதாகவும், கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அவர்களினால் பிரயோகிக்கப்படுதலும், புரியப்படுதலும், நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II | நிரல் III | நிரல் IV |
|---|---|---|---|
| 1. எம்பிலிப்பிட்டிய நகர சபை | 2011.05.02 | திரு. மாபுல இத்தமல்கொடகே தொன் கருணாசேக்கர, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் - சப்ரகமுவ மாகாண சபை | திரு. எச். ஏ. கே. புஷ்பகுமார, பிரதேச செயலாளர், எம்பிலிபிட்டிய. |
| 2. தங்கல்லை நகர சபை | 2011.03.19 | திரு. பீ. எச். கே. விக்டர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மாத்தறை | திரு. பீ. எஸ். ஜீ. ருவன்சிரி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர், அம்பாந்தோட்டை |
| 3. பத்தேகம பிரதேச சபை | 2011.03.20 | திரு. சீ. சீ. முஹந்திரம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், காலி | திரு. பீ. எஸ். குணவர்தன, பிரதேச செயலாளர், பத்தேகம |
| 4. இரத்தினபுரி பிரதேச சபை | 2011.03.19 | திரு. சமரசிங்க ஆரச்சிலாகே திசாநந்த, சப்ரகமுவ மாகாண சபையின் முதலமைச்சின் உதவிச் செயலாளர் | திருமதி சீ. எம். கோட்டவத்த, பிரதேச செயலாளர், இரத்தினபுரி |

7 - 327

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.